**தலைப்பு 260 - நுவரெலியா மாவட்டச் செயலகம்**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 மாவட்ட செயலகத்தின் பிரதான செயற்பாடுகள்

(அ) மாவட்டத்தின் தலைமை நிர்வாக நிலையமாக செயற்படுதல்.

(ஆ) மாவட்டத்தில் சமய மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்காக நடவடிக்கை எடுத்தல்.

(இ) மாவட்டத்தில் நிரந்தரமான அபிவிருத்தியை நோக்கி செல்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.

(ஈ) அரச கொள்கைகளுக்கு அமைவாக மாவட்டத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகளை எடுத்தல்.

(உ) பிரதேச செயலகங்களின் மேற்பார்வை மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

(ஊ) பதவியணிக்கான பயிற்சியும் அபிவிருத்தியும்.

(எ) மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

(ஏ) வெவ்வேறு அமைச்சு மற்றும் திணைக்களங்களினூடாக மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல்.

(ஐ) துப்பாக்கிகள் மற்றும் வெடி பொருட்களுக்கான அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல்.

(ஒ) பிரதேச செயலகங்களினதும் மாவட்ட செயலகத்தினதும் நிதி முகாமைத்துவ நடவடிக்கைளை மேற்கொள்ளல்.

(ஓ) சொத்துக்களின் பொறுப்பினையும் கட்டுப்பாட்டினையும் உறுதிப்படுத்துதல்.

(ஔ) தேசிய மட்டத்தில் விழாக்களை ஒழுங்கமைத்தல்.

**1.2 மாவட்ட செயலகத்தின் கீழ் உள்ள பிரதேச செயலகங்கள்**

---

(அ) நுவரெலியா

(ஆ) அம்பகமுவ

(இ) வலப்பனை

(ஈ) கொத்மலே

(உ) ஹங்குரன்கெத்த

**1.3 கணக்காய்வின் நோக்கெல்லை**

---

நுவரெலியா மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 05 ஆம் திகதி மாவட்ட செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.4 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

---

ஒதுக்கீட்டுக் கணக்கினை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல்

என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் அல்லது இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி அறிக்கைகள் மற்றும் பதிவேடுகளின் பிரகாரம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு இங்கே (அ) முதல் (ஊ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.6 முதல் 1.14 வரையான பந்திகளில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

### (அ) ஆவணங்கள் மற்றும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை

மாவட்ட செயலகத்தால் பின்வரும் பதிவேடுகள் பேணப்பட்டிராமை தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேடுகளின் வகை | உரிய நிதிப் பிரமாணம் |
|---|---|
| நட்டங்களும் இழப்புகளும் பதிவேடு | நிதிப் பிரமாணம் 110 |
| பற்றுச்சீட்டுப் புத்தகப் பதிவேடுகளும் | நிதிப் பிரமாணம் 341(2) |
| நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆம் திகதி 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| வாகன சம்பவக் குறிப்பேடு | நிதிப் பிரமாணம் 1645 |
| கணனி உதிரிப் பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |

**(ஆ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளித்தல்**

மாவட்டச் செயலகத்திற்கு மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 04 கணக்காய்வு ஐயவினாக்களும் முன்னைய ஆண்டின் போது விநியோகிக்கப்பட்டிருந்த 06 ஐயவினாக்களுக்கும் 2014 யூன் 30 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிராததுடன் அவ் ஐயவினாக்களுக்கு உரித்தான கணிப்பிடப்படக்கூடிய கொடுக்கல்வாங்கல்களின் பெறுமதி ரூபா 43,965,269 ஆகக் காணப்பட்டது.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(i) மொத்த நிதி ஏற்பாடும் செலவினங்களும்**

மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 399,225,000 தொகையாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதி வரையில் அதில் ரூபா 382,792,174 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 16,432,826 அதாவது 4.1 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது<br>தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள | சேமிப்புக்கள் தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டுவருபவை | 340,875,000 | 328,858,511 | 12,016,489 | 3.5 |
| மூலதனம் | 58,350,000 | 53,933,663 | 4,416,337 | 7.6 |
| மொத்தம் | **399,225,000** | **382,792,174** | **16,432,826** | **4.1** |

**(II) பாதீட்டு முரண்**

------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செலவின விடயமொன்றிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

- 07 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்புக்கள் அச் செலவின விடயத்திற்கு உரித்தான தேறிய ஏற்பாட்டின் 21 சதவீதத்திலிருந்து 61 சதவீதம் வரையான வீச்சைக் கொண்டிருந்தது.

**(III) ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளின் பயன்பாடு**

--------------------------------------------------------------------------------------------------------------------

வெவ்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய 24 அமைச்சுக்களிலிருந்தும் 20 திணைக்களங்களிடமிருந்தும் ரூபா 1,566,600,779 கூட்டுத்தொகையான நிதிஏற்பாடுகள் மாவட்டச் செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தன. அவ் ஏற்பாடுகளில் முறையே ரூபா 501,990,689 தொகையும் ரூபா 654,931,377 தொகையுமாக ரூபா 1,156,922,066 கூட்டுத்தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு முறையே ரூபா 380,115,189 தொகையும் ரூபா 29,563,524 தொகையுமாக ரூபா 409,678,713 தொகையான நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இச் சேமிப்பு வழங்கப்பட்ட ஏற்பாட்டில் முறையே 43 சதவீதமாகவும் 4 சதவீதமாகவும் காணப்பட்டது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- 2008 செப்தெம்பர் 05 ஆம் திகதிய 21 ஆம் இலக்க (புதிய 2008 ஒக்டோபர்) சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் படி நுவரெலிய மாவட்டத்தின் 05 பிரதேச செயலகங்களுக்குரிய பாலூட்டும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு ரூபா 500 பெறுமதியான சத்துணவுப் பொதி வழங்கப்படுவதற்காக 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 16,019,000 கூட்டுத்தொகையான ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அவ் 05 பிரதேசச் செயலகங்களுக்குரித்தாக தற்போது நலன்களைப் பெறாத சமுர்த்தி நலன்பெறுனர்களல்லாத, குறைந்த வருமானமீட்டும் மூலதனச் சுட்டெண் (பீஎம் 1) பெறுமதியிலும் குறைவான 3,518 தாய்மார்களுக்காக ரூபா 500 படி சத்துணவுப் பொதி 20 மாதங்களுக்கு வழங்குவதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 732 தாய்மார்களுக்கு மாத்திரமே போசணைக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது.

- 2012 யூலை 10 ஆம் திகதிய 02/2012 ஆம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுச் சுற்றறிக்கையின் 5.1.2(2) ஆம் பந்தியின் படி வலப்பனை பிரதேசச் செயலகத்தால் நாற்றுக்கள் கொள்வனவு செய்யும்போது விவசாயத் திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட விலைக்கு மாத்திரமே கொள்வனவு செய்யப்பட வேண்டியதாகக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக ரூபா 46,970 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டு நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

- மேற்குறித்த சுற்றறிக்கையின் படி நாற்றுக்கள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தின் போது இதற்கான போக்குவரத்துச் செலவினம் உள்ளடக்கப்படலாகாது எனவும் 15 கி.மீ இலும் பார்க்க கூடியளவு தொலைவில் உள்ள நாற்று மேடைகளிலிருந்து கட்டளையிடப்படுகையில் மாவட்ட விலைக் குழுவின் விலைகளின் அடிப்படையில் போக்குவரத்துச் செலவினம் ஏற்கப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இதற்கு முரணாக வலப்பனை பிரதேசச் செயலகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட நாற்றுக்களின் எண்ணிக்கைக்கு ரூபா 35,000 தொகை போக்குவரத்துச் செலவினமாக ஏற்கப்பட்டிருந்தது.

- 2013 மார்ச் 12 ஆம் திகதிய CDWA/06/03/04/1/2013 ஆம் இலக்க சிறுவர் செயலக பணிப்பாளரின் கடிதத்தின் படி, நுவரெலியா மாவட்டச் செயலகத்துடன் இணைக்கப்பட்ட 05 பிரதேச செயலகங்களுக்குரிய ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்காக ஒரு கோப்பை பால் வழங்கப்படுவதற்காக ரூபா 3,828,700 தொகை வழங்கப்பட்டிருந்தது. அத் தொகையில் 2013 ஒக்டோபர் 01 ஆம் திகதி வரையிலும் ரூபா 1,184,355 மாத்திரமே செலவிடப்பட்டு எஞ்சிய ரூபா 2,644,345 தொகையும் 2013 செப்தெம்பர் அம்பகமுவ பிரதேச செயலகத்திற்குக் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 1,787,040 தொகையும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை விளைவற்று வைத்துக்கொள்ளப்பட்டு மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

- அம்பகமுவை பிரதேச செயலகத்தால் திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 118,125 பெறுமதியான 945 வாழைக்கன்றுகள் நலனாளிகளுக்கு வழங்கப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- அம்பகமுவை பிரதேச செயலகத்தால் திடீர் அனர்த்தங்களுக்குள்ளான பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்படுவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 38,088 பெறுமதியான 48 பாடசாலை பைகள் நலனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை.

- ஹங்குரன்கெத்த பிரதேசச் செயலகத்தால் திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் கோழிக்குஞ்சுகள் கொள்வனவு செய்யப்படுவதற்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 868,000 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்ட ஊர்க் கோழிக் குஞ்சுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது 90 கோழிக் குஞ்சுகளைப் பெற்றிருந்த நலனாளிகளை பரீட்சித்த போது ரூபா 20,300 பெறுமதியான 58 கோழிக்குஞ்சுகள் இறந்திருந்தமை நலனாளிகளின் பௌதீக

பரிசீலனையின்போது எழுத்து மூல அறிக்கையின் படி உறுதிப்படுத்தப்பட்டது.

- வலப்பனை பிரதேசச் செயலகத்தால் திவிநெகும செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டு நலனாலிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த 2460 கோழிக்குஞ்சுகளில் 920 கோழிக்குஞ்சுகளின் பின்தொடர் ஆய்வு அறிக்கைப் பரிசீலனையின் போது ரூபா 222,720 பெறுமதியான 696 கோழிக்குஞ்சுகள் இறந்திருந்ததாக எழுத்து மூல அறிக்கையின் படி உறுதிப்படுத்தப்பட்டது. இவர்களில் 42 நலன்பெறுனர்களுக்காக 10 கோழிக்குஞ்சுகளின் வீதம் வழங்கப்பட்டிருந்த அனைத்துக் கோழிக்குஞ்சுகளும் இறந்திருந்ததுடன் அந் நலனாலிகளுக்கு ரூபா 3,000 படி கூடுகள் அமைப்பதற்காக வழங்கப்பட்ட தொகை உள்ளடங்கலாக ரூபா 348,720 தொகையும் விளைவற்ற செலவினமாகியிருந்தது.

**(ஈ) கட்டுநிதிக் கணக்கு**

மாவட்ட செயலகத்தின் 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான கட்டுநிதி மீதியின் கூட்டுத்தொகை ரூபா 1,138,993 ஆகக் காணப்பட்டது. 2014 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையில் மாவட்ட செயலகத்திற்குத் தீர்க்கப்படாதிருந்த கட்டுநிதி மீதியின் கூட்டுத்தொகை ரூபா 1,462,108 ஆகக் காணப்பட்டது. இதில் ரூபா 1,138,993 தொகையான மீதி 2012 ஏப்ரல் 04 ஆம் திகதியிலிருந்தும் 2013 மே 13 ஆம் திகதியிலிருந்தும் நிலவிவந்திருந்தன.

**(உ) பொது வைப்புக் கணக்குகள்**

மாவட்ட செயலகத்திற்கும் 05 பிரதேச செயலகங்களிற்கும் உரித்தாக 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறான வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 100,515,704 ஆக இருந்தது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 1,390,706 கூட்டுத்தொகையான 72 வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) குறித்த காலத்திற்கு மேலாகக் காணப்பட்ட ரூபா 2,009,436 கூட்டுத்தொகையான பிடித்து வைத்தல் தொகைப் பணமும் ஏனைய செயற்பாடுகளுக்காகக் கிடைத்த பணமும் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் அரசாங்க வருமானத்திற்குச் செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

மாவட்ட செயலகத்திற்குரித்தான அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகளும் உள்ளவாறான பெறுமதிகளும் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளவாறான வை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 26001 | 30,000,000 | 27,025,872 | 18,800,000 | 29,419,182 | 120,000,000 | 66,324,561 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2004 ஒக்தோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத் திட்டச் சுற்றறிக்கையின் 1.1.7 ஆம் பந்தியின் பிரகாரம் உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச்சென்று 3 மாதங்கள் கடந்ததன் பின்னர் திணைக்களங்களுக்கிடையே தீர்வு செய்யப்படாத கடன் மீதிகளைக் காண்பிக்காதிருப்பதற்கு பொறுப்புடன் இருக்க வேண்டுமென அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்த போதிலும் வேறு திணைக்களங்கள்/

அமைச்சுக்களுக்கு இடமாற்றம் பெற்றுச்சென்றிருந்த 04 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 675.378 கூட்டுத்தொகையான கடன் மீதி 01 முதல் 19 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும் அம் மீதி தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் படி, கடன் தொகை வழங்கப்பட்டு அத் தொகை மீளச் செலுத்தி முடிப்பதற்கு முன்னர் ஓய்வுபெற்ற அல்லது சேவை முடிவுறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் கடன்மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 03 பிரதேசச் செயலகங்களுக்குரித்தான 5 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 128,976 தொகையான கடன் மீதிகளை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் படி, பணி இடைநிறுத்தப்பட்ட உத்தியோகத்தர்களின் நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டிய போதிலும் மாவட்ட செயலகத்திற்கும் 03 பிரதேசச் செயலகங்களிற்கும் உரித்தான பணி இடைநிறுத்தப்பட்ட 10 உத்தியோகத்தர்களிடமிருந்து ரூபா 491,595 தொகையான நிலுவைக் கடன் மீதி 01 முதல் 07 ஆண்டுகள் வரையான காலதாமதம் அடைந்தும் அக் கடன்மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 1.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2010 மார்ச் 10 ஆம் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பந்தியின் 3 ஆம் பிரகாரம் மாவட்டச் செயலகத்தினால் 2013 பெப்ரவரி 26 ஆம் திகதி வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய ஆண்டின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய நோக்கங்களுக்கும்

இலக்குகளுக்கும் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களை தெளிவாக இனங்கண்டு அதில் உள்ளடக்கியிருக்கவில்லை.

## 1.7 சொத்துக்கள் முகாமைத்துவம்

சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் 2 ஆண்டு காலம் முதல் 3 மோட்டார் வாகனங்கள் விளைவற்றுக் காணப்பட்டன.

(ii) நில்தண்டாஹின்ன கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள வலப்பனே பிரதேச செயலகத்திற்கு உரித்தான சுற்றுலா விடுதிக்காக ஒதுக்கப்பட்டிருந்த கட்டிடம் 6 ஆண்டுகாலமாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

### (ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2013 ஆம் ஆண்டிற்குரித்தான பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்த மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் வேறு பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

(ii) சகல பெறுவனவுகள் மற்றும் வழங்கல்கள் தொடர்பாக முறையான வகையில் கணக்கீடு மேற்கொள்ளப்பட வேண்டிய

போதிலும் நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் மிகையான 41 பொருட்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 751 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதிப்பிரமாணம் 751 (1) இன் பிரகாரம் அரசாங்கத் திணைக்களங்களுக்குக் கிடைக்கப்பெறும் சகல பொருட்களும் உடனடியாக பொருட்பதிவேட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய போதிலும் நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் 147 வகையான பொருட்கள் ஏடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

அம்பகமுவ பிரதேசச் செயலகத்தால் ரூபா 5,000,000 பெறுமதியான ஓர் கட்டிடம் மத்திய மாகாண அமைச்சரின் ஒருங்கிணைப்பு அலுவலகத்தை நடாத்துவதற்காக விடுவிக்கப்பட்டிருந்தது.

**(ஈ) வேறு நிறுவகத்திடமுள்ள சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டமை**

வேறு நிறுவகத்திடமிருந்த சில சொத்துக்கள் முறையற்ற அங்கீகாரமின்றி கொத்மலை பிரதேச செயலகத்தால் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| | சொத்துக்களின் வகை | சொத்துக்கள் உரித்தான நிறுவனம் | சொத்துக்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| (i) | காணி | மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபை | 01 |
| (ii) | கட்டிடங்கள் | மேற்படி | 03 |

**(உ) தீர்க்கப்படாத பொறுப்புகள்**

மாவட்ட செயலகத்தால் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்குக் குறைவான காலமாக பேணப்பட்டுவரும் தீர்க்கப்படாத பொறுப்புக்களின் கூட்டுத்தொகை ரூபா 1,780,423 ஆகக் காணப்பட்டது.

## 1.8 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரித்துக் காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| | **ரூபா** | |
| (அ) நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | |
| (i) 182 ஆம் (அதிகாரமான) துப்பாக்கி கட்டளைச்சட்டத்தின் 22(2) (எ) | - | எவரேனும் ஒருவரிடமுள்ள துப்பாக்கிக்காக வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் வழக்கிழந்து பத்து நாட்களுக்குள் மாத்திரமே அத் துப்பாக்கியை தம்வசம் வைத்திருக்க இயலுமானதுடன் அதனை அடுத்து அரசாங்க பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரின் 2013 செப்தெம்பர் 18 ஆம் திகதிய எம்ஓடீ/சீஎஸ்3/எப்/2/2013 ஆம் இலக்கக் கடிதத்தின் 11 ஆம் பந்தியின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய |

போதிலும் 05 பிரதேச செயலகங்களுக்கு உரித்தான 7 துப்பாக்கிகளுக்காக 2014 யூலை 31 ஆம் திகதி வரையிலும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) 1995 இன் 35 ஆம் இலக்க அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 49 ஆம் பிரிவு - நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் அளவை சேவைகள் மற்றும் உபாய மார்க்கங்கள் பரிசோதகர்களால் 2013 ஆம் ஆண்டின் 54 சுற்றிவளைப்புகளும் 2012 ஆம் ஆண்டிற்காக 100 சுற்றிவளைப்புகளும் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட கட்டளைகள் மீறிய நபர்கள்.∴. நிறுவகங்கள் 2012 ஆம் ஆண்டின் போது 41 உம், 2013 ஆம் ஆண்டின் போது 29 களுக்காக குறித்த நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

(ஆ) இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணம்

------------------------------------------------------

(i) நிதிப் பிரமாணம் 102 மற்றும் 756 - நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினால் 2012 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கைகளின் படி 82 பொருட்களின் பற்றாக்குறை நிலவியது. 2013 ஆம் ஆண்டின் பொருள்மெய்மையாய்வு 2014

| | | | |
|---|---|---|---|
| | | | மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணம் 177 | 317,899 | நுவரெலியா மாவட்டச் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்ட அளவீட்டு அலகு நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினால் சேகரிக்கப்பட்ட பணம் நாளாந்தம் அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 396(ஈ) | 29,851 | 02 பிரதேச செயலகங்களின் வங்கிக் கணக்குகளில் வழங்கப்பட்டு எனினும் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிராத காலாவதியான காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை

---------------------------------------------

| | | |
|---|---|---|
| 2008 மார்ச் 26 ஆம் திகதிய 11/2006 (1) ஆம் இலக்க சுற்றறிக்கை | | மாவட்டச் செயலகத்தில் ஈடுபடுத்தப்பட்ட 03 உத்தியோகபூர்வ வாகனங்கள் தொடர்பில் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(ஈ) அரச நிதிச் சுற்றறிக்கை

--------------------------------------

| | | | |
|---|---|---|---|
| (i) | 2010 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 446 ஆம் இலக்க சுற்றறிக்கை | 117,999 | (i) மாவட்டச் செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகள் மீறப்பட்டு தொலைபேசிச் செலவினங்கள் மீளளிக்கப்பட்டிருந்தது. |
| | | 11,385 | (ii) கொத்மலை பிரதேச செயலாளரால் அங்கீகரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | | | எல்லை மீறப்பட்டு தொலைபேசிச் செலவினங்கள் மீள் நிரப்பப்பட்டிருந்தன. |
| (ii) | 2004 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய 353(5) ஆம் இலக்க சுற்றறிக்கை | 2,370,000 | வாகன விற்பனையின் போது பெறுமதி மதிப்பிடப்படுவதற்காக மதிப்பீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தாது மாவட்டச் செயலகத்தால் மோட்டார் வாகனத் திணைக்களத்தின் மோட்டார் வாகனப் பரிசோதகர்களை ஈடுபடுத்தி 05 வாகனங்கள் மதிப்பிடப்பட்டிருந்தன. |

## 1.9 செயற்திட்டத்தை அமுல்படுத்துவதில் பலவீனங்கள்

செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல், செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்படல் மற்றும் செயற்திட்டங்களின் தாமதங்கள் குறித்து கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

### (அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடுதல்

மாவட்டச் செயலகத்தால் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| பிரதேச செயலகம் | செயற்திட்ட எண்ணிக்கை | மதிப்பீட்டுப் பெறுமதி | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | ஆரம்பிக்கப்பட்டிரா மைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | | ரூபா | | |
| கொத்மலை | 02 | 4,000,000 | - | காலம் போதாமை |
| அம்பகமுவை | 14 | 20,163,005 | - | மேற்படி |
| நுவரெலியா | 18 | 450,000 | - | செயற்திட்டத்தை செயற்படுத்துதல் நுவரெலியா பிரதேச சபையின் கீழாகும் |
| ஹங்குரன்கெத | 07 | 700,000 | - | இச் செயற்திட்டம் உரிய தீர்மானத்தைச் சமர்ப்பித்த கௌரவ அமைச்சர்களால் திருத்தத்திற்காக தொடர்புபடுத்தப்பட்டுள்ளது. 2013 திசெம்பர் 31 வரையிலும் திருத்தம் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை |

**(ஆ) செயற்திட்டத்தைப் பூர்த்தி செய்யாது கைவிடுதல்**

நுவரெலியா பிரதேச செயலகத்தினால் செயற்திட்டம் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டன. விபரம் பின்வருமாறாகும்.

| செயற்திட்டம் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப் பட்ட திகதி | 2013 திசெம்பர் 31 வரையில் செலவினம் | கைவிடப்பட்டமைக்கான காரணம் |
|---|---|---|---|---|
| | ரூபா | | ரூபா | |
| இளைஞர் அபிவிருத்திக்காக இசை உபகரணங்கள் | 100,000 | 2013.10.21 | - | விலைமனுக் கோரப்படுகையில் கோரப்பட்ட பொருட்களின் விபரம் தெளிவற்றதாகியிருந்ததுடன் இது தொடர்பாக மனுதாரருக்கு பல முறை அறிவிக்கப்பட்டிருந்த |

| | | | | |
|---|---|---|---|---|
| வழங்கல் பம்பரகலே வத்த நுவரெலியா | | | | போதிலும் இது தொடர்பாக பதிலளிக்கவில்லை. |
| கலாச்சார நிலையத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணிப்பு – ஒலிம்பியாவத்த, மேற்பகுதி | 2,000,000 | 2013.10.02 | - | சட்ட நிலை காரணமாக இச் செயற்பாட்டின் முதலாம் கட்டமும் பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் இரண்டாம் கட்ட நிர்மாணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. |

**(இ) செயற்திட்டம் செயற்படுத்துவதிலான தாமதங்கள்**

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட செயற்திட்டங்களை மேற்கொள்வதிலான தாமங்கள் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| பிரதேச செயலகம் | செயற்திட்ட எண்ணிக்கை | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி | பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதி | 2013 திசெம்பர் 31 வரையில் செலவினம் | தாமதத்திற்கான காரணம் |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | ரூபா | |
| நுவரெலியா | 08 | 13,012,194 | 2013.09.12 | 2013.12.19 | 3,602,486 | ஒப்பந்தக்காரர்கள் தாமதமாக செயற்திட்டத்தை ஆரம்பித்தல் |
| கொத்மலை | 02 | 801,500 | 2013.11.14 | 2013.12.25 | - | காணிக் கையேற்பிலான தாமதம் |
| அம்பகமுவை | 37 | 14,066,269 | 2013.10.25 | 2013.12.30 | - | இச் செயற்திட்டம் கந்துரட்ட உதானய அபிவிருத்தி முன்மொழிவாக செயற்திட்டம் பூர்த்திசெய்யப்படுவதற் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | கு போதுமான அளவு காலம் இன்மை, மழையால் ஏற்பட்ட பாதிப்பு, மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்வதிலான சிரமம் |
| வலப்பனை | 14 | 7,900,000 | 2013.12.25 | 2014.03.25 | - | 2013 திசெம்பர் மாதம் செயற்திட்டம் திருத்தப்படலும் மழையும் |

## 1.10 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

--------------------------------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்ட அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறாகும்.

(அ) மாவட்ட செயலகத்தின் சுத்திகரிப்பு சேவைக்காக மட்டுப்படுத்தப்பட்ட விலைகள் பெற்றுக்கொள்ளப்பட்ட மனுதாரர்களிடையே ஒரு தொழிலாளிக்கு ரூபா 11,500 தொகையான விலை மனு ஏற்றுக்கொள்ளப்படாது இதனிலும் பார்க்கக் கூடுதலான விலைமனுவான ரூபா 13,875 தொகையான விலைமனு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தமையால் ஒரு தொழிலாளிக்காக ரூபா 2,375 படி 10 தொழிலாளர்களுக்கு மாதமொன்றிற்கு ரூபா 23,750 படி மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) மாவட்ட செயலகத்தினால் தனியார் கம்பனி ஒன்றுடன் அலுவலகத்தின் பாதுகாப்புச் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இவ் உடன்படிக்கையின் படி மொத்தமாக 10 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டிய போதிலும் மாவட்டச் செயலகத்திற்கும் சுற்றுச்சூழலுக்குமாக 8 ஊழியர்கள் மாத்திரமே சேவையில் ஈடுபடுத்தப்பட்டு 10 ஊழியர்களுக்கான கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ரூபா 317,342 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மாவட்ட செயலகத்திற்கு உரித்தான பொல்ரோ ஜீப் வண்டி முறையான அங்கீகாரமின்றி மத்திய மாகாண சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(ஈ) கொத்மலை பிரதேச செயலகத்தின் செயற்பாடுகளுக்காக நிலையான இணையதள இணைப்பொன்று இருக்கையில் சொந்தப் பெயர்களில் இணையதள டொங்கில் இணைப்புகள் கொள்வனவு செய்யப்பட்டு இதற்காகச் செலுத்தப்பட்டிருந்த பட்டியல்களின் பெறுமதி ரூபா 4,981 ஆகக் காணப்பட்டது.

**1.11 மோசடித் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

---

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் மோசடித் தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள் கண்டறியப்பட்டன.

(அ) நுவரெலியா பிரதேச செயலகத்தில் 2013 ஆம் ஆண்டின் போது பன்முகப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் ரூபா 96,000 தொகை செலவிடப்பட்டு 48 கூரைத் தகடுகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. 26 கேஜ் கூரைத் தகடொன்றின் அங்கீகரிக்கப்பட்ட நிறை 15 கி.கி ஆன போதிலும் அலுவலகத்தால் பகிர்ந்தளிக்கப்பட்ட கூரைத் தகடொன்றின் பௌதீக ஆய்வின் போதான நிறை 4 கி.கி இற்கும் 4.3 இற்கும் இடைப்பட்ட நிலையில் காணப்பட்டது. ஏற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளின் படி கூரைத் தகடுகள் கொள்வனவு செய்யப்பட்டிராமையால் ரூபா 72,000 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) நுவரெலியா பிரதேச செயலகத்தில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித்திட்டம் 2013 இன் கீழ் லிந்துல லெமியர் யு.சீ. வீட்டுக் கால்வாய் முறைமை தயாரிக்கப்பட்டமையால் 23 மூடைச் சீமேந்து ரூபா 22,080 இற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் அளவைப் பரிசோதனையின் போது 10 மூடைச் சீமேந்து மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தமையால் ரூபா 12,480 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**1.12 சிக்கனமற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

-----------------------------------------------------

கொத்மலை பிரதேச செயலகத்தின் கழிவு நீர்க் கால்வாய் முறைமையைச் சுத்திகரிப்பதற்காக நுவரெலியா நகர ஆணையாளருக்கு ரூபா 5,358 கழிவகற்றல் வண்டிக்காக செலுத்தப்பட்டிருந்தது. கழிவு வண்டி அவ்விடத்திற்குச் செல்வதற்கு முடியாதிருந்தமையால் செலவினம் விளைவற்றுக் காணப்பட்டது.

**1.13 முகாமைத்துவ நலிவுகள்**

------------------------------------

தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் முகாமைத்துவ நலிவுகள் கண்டிறியப்பட்டன.

(அ) மாவட்டச் செயலகத்திற்குரித்தான 42 வாகனங்கள் இருந்த போதிலும் இவற்றில் 16 வாகனங்களின் தகவல்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது எய்தப்படக்கூடிய செயற்பாடுகள் அனைத்தும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் சுட்டிக்காட்டப்பட வேண்டிய போதிலும் மாவட்டச் செயலகத்தால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் வாகனங்கள், இயந்திர உபகரணங்கள் மற்றும் கட்டிடங்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல், பயிற்சி மற்றும் சுழற்சி மேம்பாடு கட்டிட மற்றும் நிர்மாணிப்பு, இயந்திரக் கொள்வனவு போன்ற ரூபா 58,350,000 தொகையான மூலதன செலவினம் மாத்திரமே உள்ளடக்கப்பட்டிருந்தது.

(இ) நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் பராமரிப்பிற்காக அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திலிருந்து 2010 ஆம் ஆண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட 186 உள்ளக தொலைபேசி முறைமைகள் 2014 யூன் மாதம் வரை பொருத்தப்படாது களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஈ) நுவரெலியா மாவட்டச் செயலகத்தின் பன்முகப்படுத்தப்பட்ட ஏற்பாட்டின் கீழ் பகிர்ந்தளிக்கப்படுவதற்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 854,000 பெறுமதியான 37 பொருட்கள் கணக்காய்வுத் தினமாகிய 2014 சனவரி 20 ஆம் திகதி வரையிலும் நலன்பெறுனர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) கொத்மலை பிரதேசச் செயலகத்திற்கு இணைக்கப்பட்டு கடமையாற்றும் சம்பளமற்ற லீவில் வெளிநாட்டிற்குச் சென்ற கிராம உத்தியோகத்தர் ஒருவர் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு விடுமுறைக் காலம் 2013 மே 24 ஆம் திகதி முடிவடைவதால் 2013 மே 09 ஆம் திகதி கடமையிலிருந்து கேட்டு விலகுவதற்கு எழுத்துமூலமான கோரிக்கையை முன்வைத்திருந்தார். 2013 நவம்பர் 11 ஆம் திகதி வரையிலும் இதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராமையால் கட்டாய சேவைக் காலம் கடமையாற்றுவதற்கு முடியாமையின் பேரில் அறவிடப்பட வேண்டிய ரூபா 582,800 தொகை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.14 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளபடியான பதவியணி

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணி தொடர்பான நிலைமை பின்வருமாறு காணப்பட்டன.

| | ஊழியர் வகை | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளவாறான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | | 32 | 22 | 10 | - |
| (ii) | மூன்றாம் மட்டம் | | 12 | 09 | 03 | - |
| (iii) | இரண்டாம் மட்டம் | | 713 | 537 | 176 | - |
| (iv) | ஆரம்ப மட்டம் | வரவேற்பு உத்தியோகத்தர் | | | | - |
| | | சாரதி | 78 | 73 | 12 | 07 |
| | | அலுவலக உதவியாளர் | | | - | - |
| (v) | ஏனைய(அமைய/ தற்காலிக / ஒப்பந்த அடிப்படையில்) | | -- | 04 | - | 04 |
| | மொத்தம் | | **835** | **645** | **201** | **11** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் 201 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அலுவலகம் தவறியிருந்தது.

(ஆ) ஆட்சேர்க்கப்பட்டிருந்த மிகையான பதவியணி தொடர்பாக முறையான அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு அலுவலகம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.